Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE

ATHOOR

**CC.No. 21/2023**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகேந்திரன் | ஜாதி | : | |
| த/பெ | : | சடையாண்டி | தொழில் | : | உதவி இயக்குநர் வேளாண்துறை , வத்தலகுண்டு |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | 43/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.09.2024.

(A1 to A5 present)

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

விதை சோதனைக்கு எடுக்க செல்லும்போது அப்போது அதற்கான விலையை கொடுத்துவிட்டு மாதிரியை எடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அப்போது விதைக்கான தொகையை அவரது வங்கி கணக்கில் செலுத்திவிடுவோம். நான் சொல்வதை போல் அல்லாமல் அப்போது விதைக்கான டென்டரை அறிவித்து அதற்கான தொகையை மாதிரி எடுக்கும் போதே செலுத்தவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்டவாறு எதிரிகளின் வங்கி கணக்கில் மாதிரி எடுத்த விதைக்கான தொகையை செலுத்தியுள்ளோம். என்ன தேதியில் எவ்வளவு ரூபாய் செலுத்தினோம் என்றால் அது பற்றியவிபரம் எனக்கு தெரியாது. அவலுவலக கணக்காளருக்கு தான் தெரியும். நான் சொல்வது போல அவ்வாறு தொகையை செலுத்தவில்லை என்றும் அவ்வாறு செலுத்தாததால் தான் அலுவலக கணக்காளர் செலுத்தியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. விதைக்கான பணம் செலுத்திய ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரியின் கடையில் விதையை எடுக்கவில்லை என்றும் அவ்வாறு எடுத்திருந்தால் அதற்கான டென்டரை விலையையும் கொடுத்திருப்பேன் அதற்கான ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் விதையை சோதனைக்கு எடுத்தபோது அதன் தன்மை எவ்வாறு இருந்தது என்றால் மருந்து கலந்து சிவப்பு நிறத்தில் இருந்தது. விதை சட்டம் பிரிவு 24ல் என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. எடுத்த மாதிரி விதையை எங்களது பாதுகாப்பில் வைப்பதற்காக நிபந்தனைகள் என்னவென்றால் அவ்வாறு எந்த நிபந்தனையும் குறிப்பிடப்படவில்லை. விற்பனைக்கு

வைக்கபட்டிருக்கும் விதைகள் நிறப்பப்ட்ட பையில் அந்த விதையினை எந்த சூழ்நிலையில் எந்த பக்குவத்தில் வைத்திருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். விதையை சோதனைக்கு எடுக்கும்போது அந்த விதை நிறப்பபட்டிருந்த முழுபையை வெட்டி சோதனைக்கு எடுத்தோம். அவ்வாறு எடுக்கும்போது அந்த விதையில் ஈரதன்மை இல்லை என்பதை நான் தெரிந்துகொண்டேனா என்றால் ஈரப்பதம் குறித்து ஆய்வகத்தில் தான் கண்டறியமுடியும். ஏற்கனவே எனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் சோதனைக்கு எடுத்துசென்ற மாதிரி விதையை எனது அலுவலகத்தில் வைத்திருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 3 மாதிரி விதை எடுத்ததில் 1 மாதிரி எனது அலுவலகத்தில் வைத்திருந்தேன். மற்ற 2 மாதிரிகளில் 1ஐ ஆய்வகத்திற்கும் உடனடியாக குடுத்துவிட்டேன் , மற்றொன்றை எதிரிகள் வசம் கொடுத்துவிட்டேன். எங்களது அலுவலகம் ஏர் கன்டிசன் வசதியுடன் கூடியதா என்றால் இல்லை. மாதிரி எடுத்த விதைகள் காற்று புகாத வண்ணம் இருந்ததா என்பதை உறுதி செய்துகொண்டேனா என்றால் கொண்டேன். ஒரு விதையை அலுவலகத்தில் வைத்துகொள்கிறோம் என்றால் அதன் சீதோஷன நிலைய சரியில்லை என்றால் அதன் முளைப்பு திறன் பாதிக்கப்படும் என்றால் தவறு. விதையை பாதுகாப்பதற்காக எத்தனை டிகிரி செல்சியம் சீதோஷன நிலை இருக்கவேண்டும் என்றால் அது விதை பாகுப்பாய்வாளருக்கு தான் தெரியும். மாதிரி விதை எடுக்கும்போது விதை ஆய்வளராக இருந்த நான் விதையை பாதுகாப்பதற்கு எத்தகையை சீதோஷன நிலை தேவை என்பதை நான் தெரிந்திருந்தும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு விதையை சேமிப்பில் வைக்கும்போது 10 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை தான் இருக்கவேண்டும் என்றால் தவறு, மேற்கணட் விபரம் விதை பகுப்பாளருக்கு தான் தெரியும். விதையில் ஈரப்பதமும் எவ்வளவு இருககவேண்டும என்று எனக்கு தெரியாது. பகுப்பாளருககு தான் தெரியும். விதையின் முளைப்பு திறன் வெப்பநிலையிலும், ஈரப்பதத்திலும் மாறுவதற்கு வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட விபரங்களை தெரிந்துகொண்டே வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் மாதிரிக்கு எடுத்த விதையை சரியான முறையில் பேக்கிங் செய்யவில்லை என்றாலும் அதன் முளைப்பு திறன் பாதிக்கும் என்றால் சரியல்ல. நான் சரியான முறையில் தான் பேக் செய்தேன். மாதிரியை எடுத்த அன்றைய தினமே சோதனைக்கு அனுப்பிவிட்டேன். ஒரு விதையை விதை ஆய்வாளர் மாதிரிக்கு எந்த முறையில் அனுப்பவேண்டும் என்று விதை விதிகள் 1968 ன் விதி 29 ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியவில்லை. விதை கட்டுப்பாட்டு ஆணைகள் படி நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட விதை கட்டுப்பாட்டு ஆணைகளில் மாதிரி விதையை எவ்வாறு ஆய்விற்கு அனுப்பவேண்டும் என்று என்ன கூறப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு விதிமுறை எதுவும் குறிப்பிடவில்லை. அவ்வாறு விதிமுறை குறிப்பிடாத பட்சத்தில் எந்த முறையை பின்பற்றி அனுப்பினேன் என்றால் பாதுகாப்பாக அனுப்பினேன். விதை ஆய்வளாரக மாதிரி எடுத்த விதையை எவ்வாறு பேக் செய்யவேண்டும் எவ்வாறு அனுப்பவேண்டும் என்று எனக்கு தெரிந்திருக்கவேண்டும் என்றும் நான் வேறு எங்கோ விதைகளை எடுத்துவிட்டு எதிரிகளின்

மீது பொய்யாக வழக்கு தொடுக்கவேண்டும் என்பதற்காக வேறு விதைகளை பகுப்பாய்விற்கு அனுப்பிவிட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விதைகள் சட்டபிரிவு எதுவும் தெரியவில்லை என்றும் தெரிந்திருநதால் அதனை முறையாக பின்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. விதைகளை எந்த போக்குவரத்து முறையில் பகுப்பாய்விற்கு அனுப்பவேண்டும் என்று விதிமுறையில் குறிப்பிடப்படவில்லை. எவ்வாறு அனுப்பவேண்டும் என்று சட்டவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் நான் வழக்கிற்காக அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.